மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய பல குற்றச்சாட்டுகளை நாம் இங்கே கவனிக்கத் தேவையில்லை. அதற்கு உரியவர்கள் உரிய நேரத்திலே பதிலளிப்பார்கள். சினிமாப் படங்களுக்கு வேண்டியவர்களுக்குத்தான் பரிசளிப்பு, வேண்டாதவர்களுக்கு எதுவுமில்லை; வேண்டியவர்களுக்குத்தான் நிதியுதவி என்று சொன்னால், அதை நிரூபிக்க முடியுமா? ஓர் உதாரணம் காட்ட முடியுமா?

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளைப் பார்க்கின்றபொழுது, அதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். வார்த்தைகளில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடுங்கள். பத்திரிகைகளில் வருவதைச் சொல்லாதீர்கள். அடுத்து, திரு. சி. ஞானசேகரன் பேசுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. அடுத்து, திரு. சி. ஞானசேகரன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 7 நிமிடங்கள். (குறுக்கீடு) இன்று guillotine நேரம் உள்ளது. எனவே, நேரத்திற்குள் வாக்கெடுப்பை முடித்தாக வேண்டும். Kindly co-operate with me.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி விவாதிப்பதற்காக முழுமையாக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நாள். அதுவும் குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தி, தொகுதி வளர்ச்சி நிதி என்ற ஒன்றை உருவாக்கி, சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லக்கூடிய பணிகளையெல்லாம் தொகுதிகளிலே எடுக்கக்கூடிய நல்ல வாய்ப்பினை முதன்முதலில் உருவாக்கித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நாங்கள் காணிக்கையாக்கிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலே முதன்முறையாக அந்தத் திட்டத்தைத் தொடக்கியவர் நீங்கள்தான். இன்று எல்லாப் பொருட்களின் விலையும் ஏறிப்போய்விட்டது. நாங்கள் கொடுக்கிற பணம் ஒரு லோடு, இரண்டு லோடு மண்ணுக்கே சரியாகப் போய்விடுகிறது.

ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், எல்லா உறுப்பினர்களுக்கும் தொகுதி நிதியாக இப்பொழுது வழங்கப்படும் 1½ கோடி ரூபாயை இரண்டு கோடி ரூபாய் என்று உயர்த்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். நீங்கள் அத்தொகையை அரசுத் துறையின் மூலமாகத்தான் செலவு செய்யப் போகிறீர்கள். குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவோ, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவோ, அல்லது உள்ளாட்சித் துறையின் மூலமாகவோ அந்தப் பணிகளுக்காக செலவு செய்வதை, சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஒப்புதலோடு செய்தால் அவர்களுக்கு தொகுதியில் நல்ல மதிப்பும் மரியாதையும் உருவாகும் என்ற காரணத்தினாலேதான், அத்தொகையை இரண்டு கோடி ரூபாய் என்று உயர்த்தி இப்பொழுதே தாங்கள் அறிவித்துவிட வேண்டுமென்று நான் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குருவிகளுக்குக்கூட ஒரு கூடு உண்டு என்று சொல்வார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வீட்டை உருவாக்கிக் கொடுப்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம் என்று வீட்டு வசதி கொள்கை விளக்கக் குறிப்பிலே அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டே சொன்னார்கள். கர்நாடக அரசு பெங்களூருவிலே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் 2½ கிரவுண்டு நிலத்தை ஒதுக்கீடு செய்து, வட்டியில்லாக் கடனையும் கொடுத்து, அங்கே M.L.A.'s Colony உருவாக்கப்பட்டது. அதேபோல, ஆந்திராவில் ஐதராபாத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கான M.L.A.'s Colony உருவாக்கப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிலும் முன்னணியில் இருந்துகொண்டிருக்கக்கூடியது நம்முடைய தமிழ் மாநிலம். எனவே, சோழிங்கநல்லூரில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இடத்தில், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், யார், யார் கேட்கிறார்களோ அவர்களுக்கு—சும்மா கொடுக்க வேண்டாம்—அரசு நிர்ணயிக்கிற நியாயமான விலைக்கு 2½ கிரவுண்டு வீட்டுமனை வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தயவுசெய்து கொஞ்சம் கருணை காட்டி, நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து நாங்கள் இதனை வலியுறுத்தி வருகிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–35

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி நேற்று விருந்து மண்டபத்திலும், இன்று காலை விவாத மண்டபத்திலும் என்னிடத்திலே திரு. ஞானசேகரன் அவர்கள் விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். நான் அவர்களிடத்திலே நம்முடைய அவை முன்னவர் சார்பாக, என் சார்பாக, இந்த அவையின் சார்பாக வைத்திருக்கிற நிபந்தனையெல்லாம், நீங்கள் சொல்லுகிற இடம் அல்லது குறிப்பிடுகிற அந்த இடத்திலே நீங்கள் ஒருவர் மாத்திரம் வீடு கட்டிப் புண்ணியம் இல்லை, 100 எம்.எல்.ஏ.–க்களுடைய கையெழுத்தாவது பெற்று என்னிடத்திலே தந்தால், அந்த 100 பேருக்கான வசதிமிக்க வீடுகளை அமைப்பதற்குப் போதுமான இடம் உங்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கையெழுத்து வாங்கிக் கொண்டிருக்கிறோம். 100 கையெழுத்துகளுக்கு மேலே இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கிறது. (சிரிப்பு) ஏனென்று சொன்னால், தனி மரம் தோப்பாகாது என்பதை நாங்கள் அறிவோம். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து அமைத்தால்தான் அது ஒரு தோப்பு போல, ஒரு காலனியாக அமைய முடியும். மாண்புமிகு அமைச்சர்களுக்கும் நீங்கள் கொடுத்துவிடுங்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் கொடுத்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னைக்கு வருகின்றபோது, தலைமையிடத்திலே அவர்கள் தங்கிப் போவதற்கு ஓர் இடம் இருக்குமேயானால், காலாகாலத்திற்கும் உதவியாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற ஆண்டு இந்த ஆண்டு. அதேபோல, கக்கன்ஜி அவர்களுடைய நூற்றாண்டு நினைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற ஆண்டு இந்த ஆண்டு. மாண்புமிகு முதல்வர் அவர்கள், பேரறிஞர் அண்ணாவினுடைய நூற்றாண்டு விழா நினைவாக, அந்தக் காலனியை உடனடியாக